**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

8082384

C

1. District மாவட்டம்: Thoothukudi PS காவல்நிலையம்: Vigilance & Anti Corruption Year ஆண்டு: 2024 FIR No. மு.த.அ. எண்: 02 Date நாள்: 29.05.24

2. (i) Act சட்டம்: The Prevention of Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: Corruption Act 1988 as Sections பிரிவுகள்: U/S 7
(iii) Act சட்டம்: amended in 2018 Act. Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல்: 24.05.24 Date to நாள் வரை: 28.05.24
Time Period நேர அளவு: Time from நேரம் முதல்: at about 13.00 hrs. Time to நேரம் வரை: at about 18.30 hrs.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 29.05.24 Time நேரம்: 09.00 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / ~~வாய் மொழியாக~~ Written Complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்: Vilathikulam, Chithambaram Nagar @ Vilathikulam Taluk office Thoothukudi District at about 60 km North
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் Thoothukudi

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: Tr. Siva Lingam (b) Father's/ ~~Husband~~'s Name : தந்தை / கணவர் பெயர்: Tr. Sankara Lingam
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம்: Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்: —
Date of Issue : வழங்கப்பட்ட நாள்: — Place of Issue : வழங்கப்பட்ட இடம்: —
(f) Occupation : தொழில்: Painter (g) Address : முகவரி: 71 E-1, Salaiyam Street, Vilathikulam, Thoothukudi

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Madasamy, Firka Surveyor, Vilathikulam, O/o Vilathikulam Taluk office, Thoothukudi

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet Attached.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Tmt. M. Sudha Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் …………………………… பதவி …………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] M Sudha 29.05.24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
29.05.24 / 10.05 hr.

M. SUDHA
Name: பெயர் Inspector of Police
Rank: நிலை Vig AC No. எண்
Thoothukudi

**Attachment to Column No.12 of First Information Report in Thoothukudi Vigilance and Anti-Corruption Cr.No.02/2024**

பணிந்து அனுப்பப்படுகிறது.

இன்று 29.05.2024-ம் தேதி 09.00மணிக்கு M.சுதா,தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் நிலையத்தில் அலுவலில் இருந்தபோது திரு.ச.சிவலிங்கம் என்பவர் நிலையத்தில் ஆஜராகி ஒரு எழுத்து மூலமான புகார் மனு கொடுத்தார். மேற்படி புகார் மனுவில் விளாத்திகுளம் சிதம்பரநகரில் சர்வே எண். 28/1B2A1உள்ள 3.42 செண்ட் காலிமனை நிலத்திற்கு தனிப்பட்டா வேண்டி கடந்த 02.05.2024 அன்று விளாத்திகுளம் தாலுகா அலுவலக வளாகத்தில் உள்ள இசேவை மையத்தில் ஆன்லைன் மூலமாக விணணப்பித்திருந்ததாகவும்,அந்த தனிப்பட்டாவினை தனக்கு அளிப்பதற்கு விளாத்திகுளம் தாலுகா அலுவலகத்தில் சர்வேயராக பணிபுரியும் திரு.மாடசாமி என்பவர் நேரடியாகவும் தனது செல்போனின் மூலமும் ரூ.3,000/- (ரூபாய் மூவாயிரம்) லஞ்சமாக கேட்பதால் மேற்படி நபர் மீதுநடவடிக்கை எடுக்குமாறும் தெரிவித்திருந்தார். நான் அந்த புகார் மனுவை பெற்று அது குறித்து இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட விளாத்திகுளம் சர்வேயர் திரு.மாடசாமியை பற்றி இரகசிய விசாரணை மேற்கொண்டும் அவர்களின் நடத்தையை அறிந்தும், புகார் மனு மீது ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அதனை கனம். தென்சரக காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகம், சென்னை அவர்களிடம் தொலைபேசியில் தெரிவித்துஅனுமதி பெற்றும் புகார் மனுவின் தன்மைக்கேற்ப தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை குற்ற எண் 02/2024 பிரிவு 7 of the Prevention of Corruption Act, 1988 as Amended in 2018 Actபடி 29.05.2024-ம் தேதி காலை 09.20 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு : நான் மேற்படி முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் கடந்த 25 வருடங்களாக பெயிண்டராக வேலை செய்து வருகிறேன். எனது பெயரில் விளாத்திகுளம் சிதம்பரநகரில் சர்வே எண்.28/1B2A1உள்ள3.42 செண்ட் காலிமனை நிலத்தை விளாத்திகுளம் திரு.A. பாலசுப்பிரமணியன் என்பவரிடம் இருந்து

15.03.2023 அன்று ரூ 2,33,000/-க்கு விலைக்கு வாங்கியிருந்தேன். அந்த நிலத்திற்கு தனிப்பட்டா வேண்டி கடந்த 02.05.24 அன்று விளாத்திகுளத்தில் தாலுகா அலுவலக வளாகத்தில் உள்ள இசேவை மையத்தில் ரூ 60/- கட்டணம் செலுத்தி அதற்குரிய ஆவணங்களை கொடுத்து ஆன்லைன் மூலமாக விண்ணப்பம் செய்திருந்தேன். அதன்பின்பு கடந்த 23.05.2024அன்று 6383088836 என்ற செல்போனிலிருந்து எனது செல்போன் எண்ணான 9677615940 என்ற எண்ணிற்கு செல்போனில் தொடர்பு கொண்ட நபர் 'நான் விளாத்திகுளம் பிர்கா சர்வேயர் மாடசாமி பேசுகிறேன். நீஙகள் பட்டா வேண்டி ஆன்லைனில் விண்ணப்பித்திருந்தீர்கள் இல்லையா அதுசம்பந்தமாக நான் நாளைக்கு உங்கள் இடத்தை அளக்க வருகிறேன்'' என்று கூறினார். பின்னர் 24.05.2024ம் தேதி மதியம் சுமார் 12.15 மணியளவில் விளாத்திகுளம் சிதம்பரநகரில் உள்ள சர்வே எண்.28/1B2Aஉள்ள எனக்கு சொந்தமான 3.42 செண்ட் காலிமனை நிலத்திற்கு வந்து இடத்தை அளந்து விட்டு, பட்டா கொடுப்பதற்கு 4 ஆயிரம் ரூபாய் தந்தால் தான் பட்டா கிடைக்கும் என்று சொன்னார். நான் மிகவும் கஷ்டப்படுகிறேன் என்று கூறினேன். அதன்பின்னர் சர்வேயர் இப்போது எல்லாம் பணம் இல்லாமல் எந்த வேலையும் நடைபெறாது பணத்தை ரெடி செய்யுங்கள் என்று கூறிவிட்டு சென்றுவிட்டார். பின்னர் 27.05.2024ம் தேதி மதியம் சுமார் 03.30 மணியளவில் நான் விளாத்திகுளம் தாலுகா அலுவலகம் சென்று சர்வேயர் அவர்களிடம் பட்டா குறித்து கேட்ட போது சர்வேயர் அனைத்தையும் தயார் செய்துவிட்டதாகவும் தாசில்தார் கையெழுத்துக்கு அனுப்பிவிட வேண்டும் என்றும் ரூ 4000/- கொண்டு வந்தால் 31.05.2024க்குள் பட்டா வாங்கி தருவதாகக் கூறினார். நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை. நான் கடன்தான் வாங்க வேண்டும் என்று சொல்லவே "4 ஆயிரத்தை குறைத்து 3 ஆயிரம் தாருங்கள், உடனே பட்டாக்கு ஏற்பாடு செய்துவிடலாம்" என்று சொன்னார். நானும் வேறுவழியில்லாமல் சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்னர் 28.05.24 அன்று சாயங்காலம் சுமார் 06.45மணியளவில் சர்வேயர் 6383088836 என்ற செல்போனிலிருந்து எனது தொலை பேசி எண் 9677615940 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு, உங்க பட்டா ஆவணங்களை எல்லாம் தாசில்தாருக்கு அனுப்பியாச்சு ரூ.3 ஆயிரம் எப்பம் கொண்டு வருவீர்கள் என்று கேட்டார். நான் பெயிண்ட் அடிக்க செல்கிறேன் 29.05.24 மதியத்திற்கு மேல் வருவதாக கூறினேன். எனக்கு லஞ்சம் கொடுத்து பட்டா வாங்குவதில் விருப்பம் இல்லாததால் லஞ்ச ஒழிப்புத்துறையில் புகார் கொடுத்துவிடலாம் என்று முடிவு செய்தேன். எனது

பெயரில் உள்ள இடத்துக்கு பட்டா வழங்க என்னிடம் ரூபாய் 3 ஆயிரம் லஞ்சம் கேட்கும் சர்வேயர் திரு.மாடசாமி மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் சம்பந்தப்பட்ட ஆவண நகல்களை இணைத்துள்ளேன்.

இப்படிக்குxxxxxx s/d., (திரு.ச.சிவலிங்கம்), நாள் 29.05.2024. Sir, Received by me on 29.05.2024 at 09.00 hrs &verified the antecedents of both the complainant and the Accused, and after getting the oral permission from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti-Corruption, Chennai and I registered a case in Thoothukudi V&AC Cr.No.02/2024u/s 7of the Prevention of Corruption Act 1988 as Amended in 2018 at 09.20 hrs. xxxxxx s/d., 29.05.2024 (M.SUDHA), Inspector of Police, V&AC, Thoothukudi. இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, வாதியின் அசல் புகார் மனு மற்றும் இணைப்புகள் ஆகியவற்றை இணைத்து கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, தூத்துக்குடி அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

M Sudha
29.05.24.

(M.SUDHA)
Inspector V&AC
Thoothukudi.